**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(13.07.2022 முதல் 17.07.2022 )**

**அறிக்கை எண் 055/2022** **தேதி.12.072022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 14°செ முதல் 20°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (07.06.2022 முதல் 11.07.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 17.07.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07/07 | 08/07 | 09/07 | 10/07 | 11/07 | தேதி | நாள் -1 13/07 | நாள்-2 14/07 | நாள்-3 15/07 | நாள்-4 16/07 | நாள்-5 17/07 |
| 23.7 | 22.2 | 22.5 | 22.3 | 36.8 | மழை (மி.மீ) | 25 | 28 | 25 | 15 | 15 |
| 29 | 27 | 31 | 28 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 28 | 28 | 30 | 30 |
| 22 | 22 | 22 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 22 | 22 |
| 7 | 7 | 8 | 8 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 90 | 83 | 91 | 93 | 88 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 80 | 80 |
| 93 | 76 | 91 | 71 | 72 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 70 | 70 |
| 24 | 21 | 20 | 21 | 21 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 20 | 20 | 20 | 16 | 16 |
| 230 | 230 | 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (13.072022 முதல் 17.07.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும்

பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை மேற்கு மலைத்தொடர்ச்சி ஒட்டியுள்ள பகுதிகளில் எதிர் பார்க்கப்படுபிறது. மேற்கு மண்டலத்தில் காற்றின் வேகம் மணிக்கு 16-20 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர் பார்க்கப்படுவதால் வாழை மரங்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>காற்றின் வெப்பநிலையும் கடந்த வாரத்தினை விட சற்று கூடுதலாக வாய்ப்புள்ளதால் இறவை பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும். |
| நெல் | நடவு | தூர் பிடிக்கும் தருணத்தில் உள்ள கார் பருவ நெல்லில் ஒரு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து இடவும். அதன் பிறகு தண்ணீரை வடிக்க வேண்டாம். இதனை ஜீலை 16 தேதிக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.<br>தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ஒரு எக்டருக்கு பென்தையான் 500 மில்லி தெளிக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் போதிய மண் ஈரத்தினை உறுதி செய்து இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி விதைப்பதனை தொடர வேண்டும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பின்பருவ கரும்பிற்கு மேலுரமாக 90 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரங்களை இடவும். |
| மஞ்சள் | விதைப்பு | அதிக காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம் மற்றும் மேகமூட்டம் நிலவ வாய்ப்புள்ளதால் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் கண்காணிக்க வேண்டும்.<br>மஞ்சளில் நுண்ணுட்டசத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 375 கிராம் பெரஸ்சல்பேட், துத்தநாக சல்பேட் மற்றும் போராக்ஸினை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் |

| | | |
|---|---|---|
| | | வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| திராட்சை | | தற்போது நிலவும் வானிலையால் திராட்சையில் அடிச்சாம்பல் மற்றும் சாம்பல்நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் சாம்பல் நோய்க்கு 0.3 சதவிகித நனையும் கந்தகம் மற்றும் அடிச்சாம்பல் நோய்க்கு 1 சதவிகித போர்டோக் கலவையை தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கால்நடைகள் | | மழையுடன் அதி வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் கோழிகளுக்கு போதிய அளவு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் தீவனம் காற்றில் சேதமடையாதவாறு கூடாரங்களில் காற்று வரும் திசையில் சாக்கு பையை தொங்கு விட வேண்டும்.<br>நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும். |

## குறுஞ்செய்தி

- லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் போதிய மண் ஈரத்தினை உறுதி செய்து இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி விதைப்பதனை தொடர வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**